*50*

# எருசலேமுக்குப் பயணப்படுதல்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #20*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

K. *கலிலேயாவில் கடைசி போதனை: சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனைகள் (மத். 18:15-35).*

L. *யூதேயாவுக்கு ஊழியம் திருப்பப்படுதல் (யோவா. 7:1; மத். 19:1 ஆகியவற்றைக் காணவும்).*

1. *இயேசு தமது சகோதரர்களால் கூடாரங்களின் பண்டிகைக்குச் செல்லும்படி வற்புறுத்தப்படுதல் (யோவா. 7:2-9).*
2. *இயேசு எருசலேமுக்கு அந்தரங்கமாகச் செல்லுதல் (லூக். 9:51-56; யோவா. 7:10).*
3. *வழியில்: சீஷத்துவம் பற்றிப் போதித்தல் (லூக். 9:57-62; மத். 8:19-22ஐக் காணவும்).*

M. *எருசலேமில்: கூடாரங்களின் பண்டிகை.*

1. *பண்டிகையின் நடுவில்: தேவாலயத்தில் போதித்தல் (யோவா. 7:11-36).*
2. *பண்டிகையின் கடைசி நாளில்: ஜீவத் தண்ணீர் பற்றிப் போதித்தல் (யோவா. 7:37-52).*
3. *பண்டிகைக்குப் பின்பு: கூடுதல் போதனை.*
   a. *விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண் (யோவா. 7:53-8:11).*

### அறிமுகம்

*சத்தியத்தால் பொதியப்பட்ட இந்தப் படிப்பானது மாபெரும் கலிலேய ஊழியத்தின் முடிவிலிருந்து பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிறைவு ஊழியத்தின் தொடக்கம் நோக்கி நகருகிறதாக மாறி கடந்து செல்லும் பாடமாக உள்ளது. இந்த நிறைவு ஊழியமானது கூடாரங்களின் பண்டிகையிலிருந்து அதைத் தொடர்ந்து வந்த பஸ்கா வரையிலும் சுமார் ஆறு மாதங்கள் நீடித்திருந்தது.*

*இந்த ஊழியத்திற்கு லூக்கா 9:51 ஒரு திறவுகோல் வசனமாக உள்ளது:*

"பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும்[1] நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி[னார்]." கிரேக்க மொழி வசனப் பகுதியானது, "அவரது பரத்துக்கேறுதலுக்கான நாட்கள் நிறைவேறினபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி[னார்]" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது (KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு வேதாகமம் ஆகியவற்றைக் காணவும்). இயேசு யூதேயாவிலும் பெரேயாவிலும் பயணம் செய்வதை நாம் காண்போம், ஆனாலும் அவரது சிந்தனையானது எருசலேமில் அவருக்கு வரவிருந்த மரணத்தையே எப்போதும் மையங் கொண்டிருந்தது.[2] ஒன்றுகூடிய தீமையின் மேகங்கள் அவரை வழிவிலக்கவில்லை; அவர் அந்த இருளான நிகழ்வை நோக்கித் தீர்மானமாக அணிநடையிட்டுச் சென்றார். ஒரு பொழிப்புரையானது,[3] "அவர் இரும்புபோன்ற திடமான மனவிருப்பத்துடன் எருசலேம் நோக்கி நிதானமாக முன் சென்றார்" என்று கூறுகிறது.

## சீஷர்கள்மீது அக்கறை (மத். 18:15-35)

எஜமானருடன் நாம் தெற்குமுகமாய்ச் செல்லுவதற்கு முன்பு, நாம் அவரது வடபகுதி ஊழியத்தை கூறி முடித்து வைக்கச் சற்றே தாமதிக்க வேண்டும். கலிலேயாவில் அவரது கடைசி உரையானது இராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்பது பற்றி சீஷர்கள் மத்தியில் நடைபெற்ற சூடான வாக்குவாதத்தினால் தூண்டப்பட்டிருந்தது (மத். 18:1; லூக். 9:46). இயேசுவின் பதிலில் முதல் பகுதியானது பிள்ளையைப் போலிருத்தலைப் பற்றியதாகவும், இரண்டாம் பகுதியானது பிறருடன் நன்கு கலந்து பழகுதல் மீது கவனத்தைக் குவித்ததாகவும் இருந்தது. முந்திய பாடத்தில் நாம் முதல் தலைப்பைப் பற்றி படித்தோம்; இப்போது நாம் இரண்டாவதைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.

### ஐக்கியத்தைப் பற்றி அக்கறை (வ. 15-20)

பிறருக்கு எதிராகப் பாவம் செய்தல் பற்றி இயேசு ஏற்கனவே பேசியிருந்தார் (மத். 18:6; மாற். 9:42). இப்போது அவர் அந்தக் கேள்வியின் மறுபக்கத்தை ஆராய்ந்து பார்க்கத் தயாராயிருந்தார்: அவரது உரையைக் கேட்பவர்களுக்கு எதிராகப் பாவம் செய்யப்பட்டிருந்தால் என்ன செய்வது? மத்தேயு 18:15 இதற்குத் திறவுகோல் வசனமாக உள்ளது: "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால்,[4] அவனிடத்தில்போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்."[5]

"தனித்திருக்கையில்" என்ற சொற்றொடரைப் புரிந்துகொள்ளுங்கள்; மூல வசனத்தில், "தனிமையில் உனக்கும் அவனுக்கும் இடையில்" என்றுள்ளது (KJVயைக் காணவும்). யாரேனும் ஒருவர் உங்கள் மனம் புண்படும்படி ஏதாவது செய்யும்போது, நீங்கள் அதைப் பெரிதாக்கி

விளம்பரப்படுத்தக் கூடாது; மாறாக, நீங்கள் அதைச் சிறியதாக்கி அதை உங்களுக்குரியதாக ஆக்க வேண்டும். கேயில் ஓலெர்[6] அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்: "உங்கள் கணவர் அல்லது மனைவி, உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள், மூப்பர்கள் அல்லது பிரசங்கியார்கள் அல்லது உங்கள் நாயிடம்கூட நீங்கள் முறையிடுவதற்கு முன்பு நீங்கள் முதலில் அந்தத் தனிநபரிடம் செல்ல வேண்டும்."

"ஆனால் அது கடினமானதாக உள்ளதே!" என்று நீங்கள் மறுக்கலாம். ஆம், அது கடினமானதாகவே உள்ளது, ஆனால் அது அவசியமானதாகவும் உள்ளது. இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிதலானது வெடிக்கின்ற சூழ்நிலைகள் பலவற்றைக் கலைத்துவிடும். இதற்கு நேர்மாறாக, நாம் கிறிஸ்துவின் அறிவுறுத்தல்களைப் புறக்கணித்தால் - நாம் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முடிவு செய்வதற்குப் பதிலாக நமது மகிழ்வற்ற தன்மையை சுற்றிலுமுள்ள ஒவ்வொருவரிடத்திலும் பகிர்ந்து கொண்டிருந்தால் - மக்கள் பிரிவுகளாகச் சேர்ந்து கொள்ளத் தொடங்குவார்கள். அது நடைபெறும்போது, கிறிஸ்துவின் சரீரத்திற்கு மாபெரும் தீங்கிழைக்கப்படும்.

உங்களுக்கு எதிராகப் பாவம் செய்துள்ள ஒரு சகோதரரிடம் (கலா. 6:1) நீங்கள் சரியான எண்ணப்போக்குடன் சென்றால், நீங்கள் பொதுவாக, பிரச்சனைகளைக் குறித்துச் செயல்பட முடியும் - ஆனால் இது எப்போதுமே நடப்பதில்லை. விஷயம் அவ்வாறு இருக்கும்போது, அடுத்து செய்ய வேண்டியது என்ன என்பதற்கு இயேசுவின் அறிவுறுத்தலைப் பின்பற்றுங்கள்: "அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ" (மத். 18:16). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுக்கான அவசியமானது வலியுறுத்தப்பட்டுள்ளது (உபா. 19:15; 2 கொரி. 13:1). முன்பு நடந்தது என்ன என்பது பற்றி மற்றவர்கள் உட்கண்ணோட்டத்தைக் கூட்டலாம், ஒருவேளை அவர்கள் ஒப்புரவாக்குதலை எளிதாக்க உதவலாம்,[7] மற்றும் அவர்கள் அந்தக் கூட்டத்தில் பரிமாறிக்கொள்ளபட்டது என்ன என்பதைப் பற்றிப் பிற்பாடு நிச்சயமாகவே சாட்சியளிக்க முடியும்.

மற்றவர்களைக் கூட்டிக் கொண்டு போவது விரும்பத்தக்க விளைவை உண்டாக்காவிட்டால் என்ன செய்வது? இயேசு, "அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக" என்று கூறினார் (மத். 18:17). இவ்விடத்தில் கிறிஸ்து "சபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது கவனிக்கத்தக்கதாக உள்ளது.[8] இரண்டு அத்தியாயங்களுக்கு முன்பாக, அவர் தமது சபையைக் கட்டப் போவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத். 16:18). இப்போது அவர் சபையை, அவர்களின் ஐக்கியத்திலிருந்து தனிநபர்களை சேர்க்கவோ அல்லது நீக்கவோ கர்த்தரால் அதிகாரத்துவம் பெற்ற மக்களின் அமைப்பு என்பதாகச் சித்தரித்தார்.

நாம் "அதை சபைக்கு எவ்வாறு சொல்வது" என்பதை இயேசு குறிப்பிட

வில்லை. சிலவேளைகளில் பொதுவான ஆராதனைக் கூட்டங்களின்போது இப்படிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்வதைக் காட்டிலும் உறுப்பினர்களின் விசேஷித்த கூட்டங்களில் அவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது மிக நல்லதாக இருக்கும். ஒரு சபையில் மூப்பர்கள் இருந்தால், இது போன்ற விஷயங்களைக் கையாளுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையை அவர்கள் தீர்மானிக்க முடியும்.[9]

''சபைக்கும் அவன் செவிகொடாதிருப்பானானால்'' என்ற சொற்றொடர் என்னை அதிக ஆர்வத்திற்குள்ளாக்குகிறது. இது, குற்றம் சாட்டப்பட்டவர், சபையாரால் அடையப்பட்ட ஒரு முடிவுக்கு இணங்கிப் போக மறுத்தல் என்பதை அர்த்தப்படுத்த முடியும் (1 கொரி. 5:12ஆ - வைக் காணவும்). "சபை" என்ற வார்த்தையை (இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற) அதன் அடிப்படை அர்த்தத்தில் எடுத்துக் கொள்வதையும் அந்த வசனத்தைப் பின்வருவதுபோல் விளக்கியுரைப்பதையும் நான் தேர்ந்து கொள்கின்றேன்: "அவனிடத்தில் அன்புடன் வந்த கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு அவன் செவிகொடாதிருப்பானானால் ..." ஒரு சகோதரர் பாவம் செய்திருந்து, அவரிடத்தில் சபையைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் வந்து, அவர் கர்த்தரிடம் திரும்பும்படிக் கண்ணீருடன் கெஞ்சிக் கேட்டிருக்கும்போது விஷயம் என்னவாக இருக்கும்? இது எவ்வகையான செயல்வலிவை ஏற்படுத்தும்? அந்தத் தனிநபர், அன்பான வேண்டுகோள்களின் வெள்ளப் பெருக்கை மறுப்பார் என்றால், அவர் பாவத்தினால் முற்றிலும் கடினப் பட்டவராய் இருக்க வேண்டும்.

அதுவும் கூட அந்தப் பாவியைத் திருப்பிக் கொண்டு வராவிட்டால், என்ன செய்வது? பின்பு, சபை [அம்மனிதருடனான] தனது ஐக்கியத்தை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று இயேசு கூறினார்: "அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக" (மத். 18:17).[10] "அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும்" என்பது "அவர் கிறிஸ்தவரல்லாதவரைப் போல்" என்று கூறுவதன் உருவக வழிமுறையாக உள்ளது. இந்த நடவடிக்கையானது அடிப்படையில் தண்டிப்பதற்கானதாயிராமல், அதற்கு மாறாக, அந்தத் தனிநபரை அவரது உணர்வுக்குக் கொண்டுவந்து அவரைக் கர்த்தருடன் மீண்டும் பிணைப்பதற்கான வழிமுறையாக உள்ளது என்பதை மற்ற வசனங்கள் தெளிவாக்குகின்றன (2 தெச. 3:14, 15). சரியான ஆவியுடன் செயல்படுத்தப்படும் ஒழுங்கு நடவடிக்கை வெறுப்புணர்வு மற்றும் வன்மம் ஆகியவற்றின் வெளிப்பாடாக இருப்பதில்லை, ஆனால் அது அன்பு மற்றும் அக்கறை ஆகியவற்றின் வெளிப்பாடாக இருக்கிறது (எபி. 12:6ஐக் காணவும்).

ஒரு பிள்ளையை ஒழுங்குபடுத்துதல் என்பது ஒருபோதும் மகிழ்ச்சிக்கு உரியதாக இருப்பதில்லை, மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரர் அல்லது சகோதரியை ஒழுங்குபடுத்துதல் என்பதும் ஒரு சந்தோஷமான நிகழ்ச்சியாக இருப்பதில்லை. இயேசு அதை அறிந்திருந்தார்; எனவே, அவர் தமது உரையைக் கேட்டவர்களை உற்சாகப்படுத்துவதற்காக, சபை இந்த அறிவுறுத்துதல்களைச் செயல்படுத்தினால், தேவன் அவர்களுடன்

இருப்பார் என்று உறுதியளித்தார் (மத். 18:18-20[11]). வசனம் 20, நன்கு பழக்கமான வசனப் பகுதியாக உள்ளது: "ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்." இருதயத்திற்கு இதமான இந்த வாக்குத் தத்தத்தைக் குறித்து நாம் பொதுவான பயன்பாட்டை ஏற்படுத்த முடியும் மற்றும் நாம் அவ்வாறு செய்கின்றோம், ஆனால் சந்தர்ப்பப் பொருளில் கிறிஸ்து, சபை ஒழுங்கு நடவடிக்கையை ஏற்படுத்த அவரது நாமத்தில் ஒன்றுகூடுகின்ற இரண்டு அல்லது மூன்று பேரைக் குறிப்பிட்டார் என்பதை சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.

சபையானது மத்தேயு 18:15-20 வசனப்பகுதியில் நன்கு பழக்கமாக வேண்டியுள்ளது; பாவத்தில் சிக்கியுள்ள ஒரு சகோதரரை அல்லது சகோ தரியை ஒழுங்குபடுத்த நாம் அடிக்கடி தயங்குகின்றோம். இருப்பினும் நாம், நமது பாடத்தின் இந்தப் பகுதியை, இந்தக் கலந்துரையாடலின் இருதயம் போன்ற மையப்பகுதி என்று நான் கருதுகின்ற ஒரு வசனத்துடன் முடித்துக் கொள்வோம்: "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்'' (வ. 15). நாம் செய்ய வேண்டியவாறு இதைச் செய்தால், பெரும்பாலான பிரச்சனைகள் தீர்க்கப்படும், சபை ஒழுங்கு நடவடிக்கை என்பது மிகவும் அரிதாகவே தேவைப்படும்.

### மன்னிப்பைப் பற்றி அக்கறை (வ. 21-35)

பாவம் நிறைந்த சகோதரரிடம் செல்லுதல் பற்றிய இயேசுவின் போதனை, அப்படிப்பட்ட ஒரு சகோதரரை, எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் என்று பேதுருவை வியப்படையத் தூண்டியது. அவர், "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ?" என்று கேட்டார் (வ. 21).[12] அவர் அநேகமாகத் தாம் பெருந்தன்மையுடன் இருந்ததாக நினைத்திருக்கலாம்; ரபீக்கள் மூன்றுதரம் மட்டுமே [மன்னிக்கும்படி] கேட்டுக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்து, ''ஏழு தரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லு கிறேன்'' என்று பதில் அளித்தபோது (வ. 22) பேதுரு திகைப்படைந் திருப்பார் என்பதில் நான் சந்தேகம் எதையும் கொண்டிருப்பதில்லை. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், மன்னிப்பு என்பது எல்லைகள் எதையும் கொண்டிருக்கக் கூடாது.

பின்பு கர்த்தர் ''இரக்கமற்ற வேலைக்காரனின் உவமையை'' எடுத்துரைத்தார், அந்த உவமையில் பெரிய கடன் ஒன்றிற்கு மன்னிப்பைப் பெற்றிருந்த ஒரு வேலைக்காரன், தனது சக வேலைக்காரன் தன்னிடம் பட்டிருந்த அற்பமான கடனை மன்னிக்க மறுத்து விட்டான் (வ. 23-35). தேவன் நமக்கு அதிகமாய் மன்னித்திருப்பதால், நாம் பிறரை மன்னிக்க மனவிருப்பம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதே இதன்

*தெளிவான பயன்பாடாக உள்ளது.*

*மத்தேயு 18:15-35ல் கர்த்தரின் போதனைகள் நமது சகோதரர்கள் - அல்லது வேறு எவருடனுமான - நம் உறவுமுறைகளுக்கு அத்தியாவசிய மாகத் தேவைப்படுகின்றன. நாம் பின்பற்றுவதற்கு அவர் இரண்டு கொள்கைகளைக் குறிப்பிட்டுள்ளார்: (1) நீங்கள் பிறருக்கு எதிராக ஏதாவது ஒரு விஷயத்தைக் கொண்டிருக்கும்போது, அதைப்பற்றி எல்லாரிடத்திலும் முறையிட்டுக் கொண்டிருப்பதற்குப் பதில், அந்த நபரிடத்தில் செல்லுங்கள்; மற்றும் (2) விரோத எண்ணத்தைக் கொண்டிராதீர்கள், ஆனால் மன்னிக்கத் தயாராயிருங்கள்.*

## அடைவிடத்திற்கான உறுதிப்பாடு
## (மத். 19:1; லூக். 9:51-62; யோவா. 7:1-10)

*மத்தேயு 19:1, "இயேசு இந்த வசனங்களை [நாம் இப்போது படித்து முடித்தவைகளை]ச் சொல்லி முடித்த பின்பு, அவர் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்" என்று கூறுகிறது. காட்சியானது இப்போது தெற்கு நோக்கி மாறுகிறது.*

*உங்கள் நினைவுத்திறன் நீண்டதாயிருந்தால், யோவான் ஸ்நானன் சிறைப்படுத்தப்பட்டபோது முடிவுற்ற ஒரு முந்திய யூதேய ஊழியத்தை இயேசு கொண்டிருந்தார் என்பதை நினைவுக்குக் கொண்டு வருவீர்கள். யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வடக்கு நோக்கிக் கிறிஸ்து சென்றிருந் தார். "... யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயாவில் சஞ்சரிக்க மனதில்லாமல்" என்று யோவான் எழுதினார் (யோவா. 7:1).[13] இருப்பினும், இப்போது அவரது முந்திய ஊழியத்தின் காட்சிப் பகுதிக்கு - பொதுவாக யூதேயாவுக்கு, மற்றும் குறிப்பாக எருசலேமுக்கு - திரும்புவதற்கான அவரது வேளை வந்திருந்தது.*

### *ஏளனம் செய்யப்பட்டபோதிலும் உறுதிப்பாட்டுடன் இருத்தல் (யோவா. 7:2-10)*

*அவரது ஊழியத்தின் இந்தப் புதிய அடிவைப்பானது கூடாரங்களின் பண்டிகைக்காக எருசலேம் சென்ற ஒரு பயணத்துடன் தொடங்கிற்று.[14] கூடாரங்களின் பண்டிகை என்பது யூதர்களின் மூன்று பிரதான பண்டிகை களில் ஒன்றாக இருந்தது (லேவி. 23:39-43; உபா. 15:12-15); இது செப்டம்பர் மாதத்தின் பிற்பகுதியில் அல்லது அக்டோபர் மாதத்தின் முற்பகுதியில் ஆசரிக்கப்பட்டது.[15]*

*இந்தப் பண்டிகைக்கான வேளை சமீபித்தபோது (யோவா. 7:2), இயேசுவின் அரைசகோதரர்கள்,[16] அவர் கலிலேயாவில் செய்திருந்த அற்புதங்களை யூதேயாவில் இருந்த அவரது சீஷர்களும் காணும்படி, பண்டிகைக்காக அவரை எருசலேமுக்குச் செல்லும்படி வற்புறுத்தினார்கள் (வ. 3, 4). வசனம் 5ன்படி, இந்த சகோதரர்கள் அவர்மீது விசுவாசம் கொண்டிருந்ததில்லை;[17] அவர்களின் வார்த்தைகள் ஒருவேளை இடக்கான பழிச்சொல்லில் இருந்து சொட்டியிருக்கலாம். அவர்கள் யூதத்தலைவர்*

களால் "மிகவும் தேடப்பட்டவர்களின்" பட்டியலில் இடம்பெற்றிராத படியால் அவர்கள் எருசலேமுக்குச் செல்லுவதில் பிரச்சனை எதுவும் இராது, ஆனால் தாம் செல்லுவது அபாயகரமானதாக இருக்கும் என்பதைக் கிறிஸ்துவின் பதிலானது சுட்டிக் காண்பித்தது (வ. 6-8). இவ்விதமாக, பயணிகள் கூட்டம் எருசலேமுக்குப் புறப்பட்டபோது, அவரும் அவரது சீஷர்களும் மற்றவர்களுடன் பயணம் செல்லவில்லை (வ. 9). ஆயினும் பிற்பாடு அவர்கள் அமைதியாக, பிறர் அறியாவண்ணம், பண்டிகைக்குச் சென்றார்கள் (வ. 10).

கடைசியில் இயேசு பண்டிகைக்குச் சென்றிருந்ததால், வசனம் 8ல் அவரது வார்த்தைகள் புதிர்நிறைந்தவைகளாக உள்ளன: "நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை." இயேசு தாம் போவதில்லை என்று கூறினார், ஆனால் பின்பு அவர் தமது மனதை மாற்றிக் கொண்டு சென்றார் என்று சில விளக்கவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக் கின்றனர். இப்படிப்பட்ட விளக்கங்கள் இயேசுவின் பண்பு[18] மற்றும் அவரது பணி அட்டவணை ஆகியவற்றுடன் சீர்பொருந்தியவைகளாகக் காணப்படுவதில்லை (லூக். 9:51).

இயேசு கூறியதற்கும் அவர் செய்ததற்கும் இடையில் முரண்பாடாகத் தோற்றம் அளிக்கும் இந்த விஷயத்திற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இயேசு தமது சகோதரர்கள் ஆலோசனையாக தெரிவித்த வகையில் - அதாவது அற்புதம் செய்யும் பகட்டுமிக்கவராக[19] - தாம் பண்டிகைக்குச் செல்லப்போவதில்லை என்று அர்த்தப்படுத்தினார் என்பதாகச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். மற்றவர்கள், அந்த வாக்கியத்தின் கடைசிப் பகுதியின்மீது கவனத்தைக் குவித்து, அந்த வாக்கியமானது, "நான் இந்த வேளையில் இப்பண்டிகைக்குச் செல்லப் போவதில்லை"[20] - அதாவது, பயணக்கூட்டத்தில் திருப்பயணிகளுடன் தாம் செல்லப்போவதில்லை - என்று அர்த்தப்படுத்தியதாக நம்புகின்றார்கள், இது, அவர் பிற்பாடு செல்லுவார் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. வேத வசனப் பகுதியில் அல்லது மறைமுகமாக உள்ள "இன்னும்" என்ற வார்த்தை இந்த வாக்கியத்தின் பாகமாகும் என்பது மிகவும் பொதுவான விளக்கமாக உள்ளது. பழங்காலக் கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் பல, இயேசுவின் வார்த்தைகளில் "இன்னும்" என்பதை உள்ளடக்கியிருக் கின்றன. இவ்விதமாக, NIV வேதாகமத்தில், "என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை" என்றுள்ளது.[21] வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "இயேசு பொய்யுரைத்த தில்லை அல்லது தட்டிக்கழிப்பவராய் இருந்ததில்லை; மாறாக அவர் உணர்வுப்பூர்வமான முன் எச்சரிக்கையையே செயல்படுத்தினார்" என்று எழுதினார்.[22]

கிறிஸ்துவின் குடும்பத்தாரும் மற்றவர்களும் பண்டிகைக்குச் சென்ற பின்பு, அவர் இன்னும் அதிகம் நாட்களுக்குக் கலிலேயாவிலேயே தங்கி யிருந்தார். பின்பு அவரும் அவரது சீஷர்களும் எருசலேமுக்கு "வெளியரங் கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய் ... போனார்கள்" (வ. 9, 10).

**புறக்கணித்தல் இருந்தபோதிலும் உறுதிப்பாட்டுடன் இருத்தல் (லூக். 9:51-56)**

இயேசுவின் எருசலேம் பயணம் பற்றி லூக்கா கூறுகின்றார். கர்த்தர் தமது புறப்பாட்டைத் தாமதப்படுத்தியதால், அவர் யோர்தான் நதியின் கிழக்குக் கரையோரமாக வழக்கமான பாதையில் யூதேயாவுக்குச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக, அவர் குறுகிய, விரைவான, குறைவாய் பயணம் செய்யப்பட்ட சமாரியாவின் வழியைப் பின்பற்றிச் சென்றார்.

கர்த்தர் கலிலேயாவுக்குச் செல்லும் வழியில் இருந்தபோது அவரை ஏற்றுக்கொள்பவர்களாய் இருந்த சமாரியர்கள் (யோவா. 4:40), அவர் பண்டிகைக்காக எருசலேம் நோக்கிச் செல்லுவதை அறிந்தபோது அவருக்குத் தங்குமிடம் அளிக்க மறுத்து விட்டார்கள் (லூக். 9:53). அவர்கள் அநேகமாக, எருசலேமில் இருந்த தேவாலயத்தில் ஆராதிக்கச் செல்லுதல் என்பது கெரீசிம் மலையில் இருந்த சமாரியர்களின் ஆலயத்திற்கு மறுப்புத் தெரிவித்தலாக இருந்ததாகக் கருதியிருக்கலாம் (யோவா. 4:20ஐக் காணவும்).

“இடி முழக்க மக்களான” யாக்கோபும் யோவானும் (மாற். 3:17), கிறிஸ்துவிடம், எலியா தமது பகைவர்களுக்குச் செய்ததுபோல (2 இரா. 1:10, 12),[23] தாங்கள் அவர்களை அழித்துப்போடுவதற்கு வானத்திலிருந்து அக்கினியை இறங்கச் செய்ய வேண்டுமா என்று கேட்டார்கள் (லூக். 9:54). இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார் (லூக். 9:55); அவர்கள் தங்கள் பகைவர்களை அழிக்கும்படி அவர்களுக்கு அவர் போதித்து இருக்கவில்லை, ஆனால் அவர்கள்மீது அன்புகூர்ந்து அவர்களுக்காக ஜெபிக்கும்படி போதித்து இருந்தார் (மத். 5:44, 45).[24] அவர்கள் ஒரு ஊரில் புறக்கணிக்கப் படும்போது, அவர்கள் இன்னொரு ஊருக்குச் செல்ல வேண்டும் என்று முன்னதாக அவர்களுக்கு அவர் அறிவுறுத்தியிருந்தார் (மத். 10:23). அதையே அவர் செய்தார் (லூக். 9:56).

**தயக்கம் இருந்தபோதிலும் உறுதிப்பாட்டுடன் இருத்தல் (லூக். 9:57-62)[25]**

எருசலேமுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்து, சீஷர்களாகவிருந்த அரைமனம் கொண்ட சிலருக்கு எதிர்ப்பட்டார். தமது மரணம் அருகில் இருந்ததை அறிந்த இயேசு, அவர்கள் தவறான பாவனையின் கீழ் பின்பற்றாளர்களாவதை விரும்பவில்லை. கடினமான வேளை முன் வந்துகொண்டிருந்தது; ஒப்பற்ற அர்ப்பணிப்பும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் மட்டுமே தங்கள் பழுதுபடாத விசுவாசத்துடன் உயிர் பிழைத்திருப்பார்கள், ஒருமுறை முடிவு மேற்கொள்ளப்பட்டு விட்டால், பின்னிட்டுத் திரும்புதல் என்பது இருக்க முடியாது.[26]

# *நன்மதிப்புடன் வாக்குவாதம்*
# *(யோவா. 7:11-8:11)*

*கூடாரங்களின் பண்டிகைக்கு இயேசு சென்ற விவரம் யோவானின் சுவிசேஷப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள், மூன்று குழுவினர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள் என்பதை அறிய வேண்டும். (1) ''யூதர்கள்'' என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்ட எருசலேமில் இருந்த மதரீதியான அதிகாரிகள் (யோவா. 7:13, 15, 35).[27] இந்தக் குழுவின் தலைவர்கள் "பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் (7:32; வ. 45, 47, 48 ஆகிய வற்றைக் காணவும்), இது சனதெரீன் சங்கத்தைக் குறிப்பிடும் ஒரு வழிமுறை யாக இருந்தது. (2) எருசலேமில் தங்கள் இல்லங்களைக் கொண்டிருந்த யூதர்கள் அங்கிருந்தார்கள் (வ. 7:25). (3) பண்டிகைக்காக அங்கு வந்திருந்த கலவையான மக்கள் கூட்டத்தார், "ஜனங்கள்" (7:12, 20, 31, 32, 40, 43) என்று அழைக்கப்பட்டார்கள். சிலவேளைகளில் இந்த எண்ணிக்கையானது முதல் இரு குழுக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிற்று, ஆனால் இது மற்ற இடங்களில் இருந்து வந்திருந்த திருப்பயணிகளைப் பிரதானமாக உள்ளடக்கியிருந்தது.*

### *பண்டிகையின் தொடக்கம்: இயேசுவின் பண்பு பற்றிய வாக்குவாதம் (7:11-13)*

*பண்டிகை தொடங்கியபோது, இயேசுவே கலந்துரையாடலின் முக்கியத் தலைப்பாக இருந்தார்.[28] அவர் எருசலேமுக்கு வந்திருந்து பல மாதங்கள் ஆகியிருந்தன,[29] அவர் இந்தப் பண்டிகைக்கு வருவாரா வரமாட்டாரா என்று மனிதர்கள் யூகம் செய்து கொண்டிருந்தனர் (வ. 11). பண்டிகைக்கு வந்திருந்தவர்களின் மத்தியில் எச்சரிக்கையான பேச்சு இருந்தது (வ. 13; இதை யோவா. 9:22உடன் ஒப்பிடவும்): "சிலர்: 'அவர் நல்லவர்' என்றார்கள். வேறு சிலர்: 'அப்படியல்ல, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன்' என்று சொல்லிக்கொண்டார்கள்" (7:12ஆ, இ). பிந்திய உற்றுநோக்கலானது பேசியவர்கள் உணர்ந்தறிந்ததை விட அதிகம் கண்டுணரத்தக்கதாக இருந்தது. இன்றைய நாட்களில் பலர், இயேசுவைத் தெய்வீகத்துவமானவர் என்று ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் இல்லாதவர் களாய் உள்ளனர், ஆனால் அவர்கள் இன்னமும் அவரை "ஒரு நல்ல மனிதர்" என்று குறிப்பிடுகின்றனர். கிறிஸ்து தாம் உரிமைகோரியபடி தேவனுடைய குமாரனாக இல்லாதிருந்தால், அவர் ஒரு நல்ல மனிதராய் இருந்ததில்லை என்றாகிறது - ஏனெனில் பொய்யர்கள் நல்ல மனிதர்களாக இருப்பதில்லை. இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவர் கள் அவரை "ஒரு நல்ல மனிதர்" என்று அழைத்து அவருக்கு உதட்டளவில் ஆராதனை [மாத்திரம்] செலுத்தக் கூடாது.*

***பாதிப் பண்டிகையில்: இயேசுவின் நன்மதிப்புகள் பற்றிய வாக்குவாதம் (7:14-36)***

*''பாதிப் பண்டிகையானபோது'' (வ. 14அ) இயேசு திடீரென்று காட்சியில் தோன்றினார் - இது அநேகமாக, பண்டிகை ஆசரிப்பின் நான்காம் நாளான செவ்வாய்க்கிழமையாக இருந்திருக்க வேண்டும்.[30] அவர் "தேவாலயத்துக்குப் போய்,[31] உபதேசம் பண்ணினார்" (வ. 14ஆ). ஒரு பையனாக இருந்தபோது, கற்றுக்கொள்வதற்காக அவர் தேவாலயத்திற்குச் சென்றிருந்தார் (லூக். 2:46); அவரது ஊழியத்தின் தொடக்கத்தில் அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்திருந்தார் (யோவா. 2:13-17); இப்போது அவர் போதிப்பதற்காக அங்கே சென்றார். தேவாலயமானது மதரீதியான அதிகாரிகளுக்குப் பலத்த பற்றுகோலாயிருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இயேசு தமக்குத் தண்டனை நிறைவேற்றவிருந்த வர்களுடன் எதிர்த்து நிற்கத் தயங்காதிருந்தார். அவர் சிங்கத்தின் குகைக்குள் சென்று சிங்கத்தின் தாடியைப் பிடித்து இழுத்தார்.*

*இது கர்த்தருடைய போதனையைக் கேட்பதற்கு, தலைவர்கள் பலருக்கு முதல் வாய்ப்பான வேளையாயிருந்தது, அவரது போதனை அவர்களை "திகைப்படையச்" செய்தது.[32] அவர்கள், "இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்?" என்று கேட்டார்கள் (யோவா. 7:15). ''கல்லாதவர்'' என்பதன் மூலம், அவர் ரபீயாவதற்கு முறையான பயிற்சியைப் பெறாதவர் என்று அவர்கள் அர்த்தப்படுத்தினார்கள். இன்றைய நாட்களில் மக்கள், ''அவர் கல்லூரியில் இருந்து ஒரு பட்டம்கூடப் பெறவில்லை!" என்று கூறலாம். உண்மையில் இயேசு, தாம் மனிதரால் ''சான்றிதழ்'' அல்லது ''உரிமம்'' வழங்கப்படாதவராக இருக்கலாம், ஆனால் அவர் தேவனால் அனுப்பப்பட்டவராக இருந்தார் (வ. 16, 18, 28, 29) என்றும் தேவன் தம்மிடத்தில் அறிவித்திருந்ததையே தாம் போதித்தார் (வ. 16) என்றும் கூறினார்.*

*அவர், "அவருடைய [தேவனுடைய] சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்'' என்று கூறினார் (வ. 17). எந்த ஒரு விஷயத்தையும் புரிந்துகொள்வதற்குத் தகுதியான மனநிலை[33] முக்கியமானதாக உள்ளது, ஆனால் தேவனுடைய வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு இது முற்றிலும் அவசியமானதாக உள்ளது. மதத் தலைவர்கள், தேவனுடைய சித்தத்தைச் செய்வதாக உரிமைகோரியிருந்தாலும், உண்மையில் அவர்கள் அதைச் செய்யாத காரணத்தால், அவர்களைப் பொறுத்தமட்டில் கிறிஸ்துவின் போதனையானது விளங்காத ஒரு புதிராகவே இருந்தது.*

*அதிகாரிகள் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதற்கு ஆதாரம் கொடுப்பதில், ஆறாவது கட்டளையை (யாத். 20:13) மீறுவதற்கான திட்டத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்று இயேசு சுட்டிக் காண்பித்தார். அவர், ''மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக்*

*கொலை செய்யத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார் (யோவா. 7:19). அவர்களின் சூழ்ச்சித் திட்டத்தை அவர் அறிந்திருந்தார் (யோவா. 5:18; 7:1) மற்றும் தாம் அதை அறிந்திருப்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*சூழ்நிலையை அறியாமல், நகருக்குப் புறம்பே இருந்த கும்பலானது, "நீ பிசாசு பிடித்தவன்; உன்னைக் கொலை செய்யத் தேடுகிறவன் யார்?" என்று பதிலுக்குக் கேள்வி கேட்டது (வ. 20). இதற்கு முன்பும் இயேசு அசுத்த ஆவியைக் கொண்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார் (மத். 9:32-34; 10:25; 12:24), ஆனால் இவ்விடத்தில் இவ்வார்த்தைகள் "நீ பித்துப் பிடித்தவனாய் இருக்கின்றாய்!" என்று மட்டுமே அர்த்தப்படுத்துகின்றன (யோவா. 10:20ஐக் காணவும்).*

*இயேசு மரணத்திற்கென்று உண்மையிலேயே குறிக்கப்பட்டிருந்தாரா அல்லவா என்ற கேள்வியானது, எருசலேமுக்கு முன்பு அவர் வந்திருந்த போது, யூதத் தலைவர்கள் "அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடி"ய நிகழ்ச்சியை மனதிற்குக் கொண்டு வந்தது (யோவா. 5:18). அந்த வேளையின்போது, இயேசு ஓய்வுநாளில் ஒரு மனிதனைக் குணமாக்கி யிருந்தார் (யோவா. 5:1-9) மற்றும் அவர் தமது நடவடிக்கையைத் தற்காத்து வாதம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார். இப்போது அவர், ஓய்வு நாளில் குணமாக்குவதற்கான கூடுதல் விவாதம் ஒன்றைக் கொடுத்தார்: ஓய்வுநாளன்று விருத்தசேதனம் செய்தல் சரியானதாக இருந்தது என்று ஒவ்வொருவரும் நம்பியதை அவர் சுட்டிக்காண்பித்தார் (7:22, 23அ).[34] உண்மையில் அவர், "ஓய்வுநாளன்று உடலின் ஒரு பகுதியைப் பரிசுத்த மாக்குவது சரியானது என்றால், நான் முழு உடலையும் சுத்திகரிக்கும்போது நீங்கள் ஏன் கோபமடைகின்றீர்கள்?" என்றே கேட்டார் (வ. 23ஆ).*

*கர்த்தர் போதிக்கத் தொடர்ந்த வேளையில், எருசலேமில் வாழ்ந்தவர் கள் (மற்றும் இவ்விதமாக அவரைக் கொலை செய்யத் திட்டமிடப் பட்டிருந்த சூழ்ச்சியை அறிந்திருந்தவர்கள்), அவர் தேவாலயத்தில் இவ்வளவு வெளிப்படையாகப் போதிக்க முடிந்தது பற்றி வியப்படைந்தார் கள் (வ. 25, 26அ). இருந்தபோதிலும், அவர்கள் இன்னமும் அவர் கிறிஸ்துவாக இருக்க முடியாது என்றே முடிவு செய்தார்கள்: "இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே ..." (வ. 27). பெரும்பாலான யூதர்கள், மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்று நம்பினார்கள் (யோவா. 7:42; மத். 2:5, 6). ஒரு சிலர், மல்கியா 3:1 மற்றும் ஏசாயா 53:8 போன்ற வசனப் பகுதிகள், மேசியாவின் தோற்றம் இரகசியத்தில் வைத்து மூடிமறைத்ததாக இருக்கும் என்பதாகப் போதித்ததாக நினைத்தார்கள்.*

*கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதில் பங்கேற்றிருந்தவர்கள் தங்கள் அறியாமையை வெளிப்படுத்தினார்கள், ஏனெனில் அவர்கள் இயேசு பிறந்த இடத்தை அறியாதிருந்தார்கள் (யோவா. 7:41ஐக் காணவும்). கிறிஸ்து உண்மையில், அவர்கள் தமது பூமிக்குரிய தோற்ற இடத்தை அறிந்திருக்கலாம் அல்லது அறியாதிருக்க*

லாம்,[35] ஆனால் உண்மையில் தாம் பரலோகத்தில் இருந்து வந்திருந்ததை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருந்தார்கள் என்றே கூறினார் (வ. 28, 29).

கூட்டத்தில் இருந்த பலர், இயேசுவில் விசுவாசம் கொள்ளுமளவுக்கு அவர்கள் மனங்களை அவர் ஈர்த்திருந்தார் (வ. 31). அவர்களின் விசுவாசம் மெல்லியதானது என்பது நிச்சயம்; ஆனால் அதுவே பிராதன ஆசாரியரை யும் பரிசேயர்களையும் கோபாவேசம் கொள்ளச் செய்வதற்குப் போதுமான தாக இருந்தது, அவர்கள் அவரைக் கைது செய்வதற்காகத் தேவாலயத்துப் போர்ச் சேவகர்களை அனுப்பி வைத்தார்கள் (வ. 32). ஆனால் கிறிஸ்து கவலையற்ற வகையில் பிரசங்கிக்கத் தொடர்ந்தார்: "இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத் திற்குப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங்கூடாது" என்றார் (வ. 33, 34). நாம் சிலுவையின் இந்தப் பக்கத்தில் வாழ்வதால், "இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருந்து" என்ற அவரது வார்த்தைகளை நாம் புரிந்துகொள்ளுகின்றோம். "இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருந்து": அவரது மரணத்திற்கு இன்னும் ஆறு மாதங்களே இருந்தன. "பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்": அவர் தேவனிடத்திற்கு எழுந்தருளுவார். "நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங்கூடாது": இவைகள் தோல்வியடையும் வாய்ப்பின் (ஓசியா 5:6ஐக் காணவும்), அவிசுவாசத்திலிருந்து விளையும் துன்பத்தின் வார்த்தைகளாக உள்ளன. அடுத்த நாளில் இயேசு, "நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது"; "... நானே அவர் [மேசியா] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறவிருந்தார் (யோவா. 8:21, 24).

இயேசு எதை அர்த்தப்படுத்தினார் என்று நாம் புரிந்துகொள்ளலாம், ஆனால் யூதத்தலைவர்கள் திகைப்புற்றுக் குழப்பம் அடைந்தார்கள். அவர் பலஸ்தீன நாட்டை விட்டு வெளியேறி யூதரல்லாதவர்களுக்குப் பிரசங் கிக்கப் போவதாகக் கூறினாரோ என்று அவர்கள் வியப்படைந்தார்கள் (7:35, 36).[36]

### பண்டிகையின் முடிவு: இயேசுவின் உரிமைகோருதல்கள் பற்றிய வாக்குவாதம் (யோவா. 7:37-52)

பதிவு செய்யப்பட்ட அடுத்த நிகழ்ச்சி "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே" நடைபெற்றது (வ. 37அ). சீலோவாம் குளத்தில் இருந்து ஒரு ஆசாரியர், தண்ணீரை ஒரு பொற்குடத்தில் எடுத்துக்கொண்டு வந்து, அதைப் பலிபீடத்தின் அடியில் மிகுந்த சடங்குடன் ஊற்றுதல் என்பதே அந்த நாளின் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. இந்தச் சடங்கானது தேவன், அவர்களின் முன்னோர்களுக்கு வனாந்தரத்தில் தண்ணீர் கொடுத்த காலத்தைப் பின்னோக்கியும் (யாத். 17:5, 6; எண். 20:7-11), மேசியா வரும் போது தேவனுடைய ஆவியானவர் ஊற்றப்படுதலை முன்னோக்கியும்

(யோவே. 2:28; அப். 2:16, 17ஐக் காணவும்) கண்ணுற்றது.

அந்த நாளில், "இயேசு நின்று, சத்தமிட்டு: 'ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, "அவன் உள்ளத்திலிருந்து[37] ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்"'" என்றார் (யோவா. 7:37ஆ, 38). பொற்குடம் இப்போது வெறுமையாக இருந்தது, ஆனால் அவரது உரையைக் கேட்டவர்கள் ஒருக்காலும் வற்றிப்போகாத நதிகளின் தண்ணீரை வழங்கப் பெற்றிருந்தார்கள்.

கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு யோவான் ஏவுதல் பெற்ற ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்: "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" (வ. 39).[38] இதன் குறிப்பானது, கிறிஸ்து பரத்துக்கேறிய பின்பு வரவிருந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகை பற்றியதாக இருந்தது (அப். 1:8; 2:1-4, 16, 17, 38). கன்மலையில் இருந்து புறப்பட்டு வந்த தண்ணீர் உடல்ரீதியான தாகத்தை நிறைவு செய்தது போலவே, தேவனுடைய ஆவியானவர், இயேசுவின்மீது நம்பிக்கை வைப்பவர்களின் ஆவிக்குரிய ஏக்கத்தை நிறைவு செய்வார்.

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டவர்கள் தங்கள் பதில்செயலில் பிரிவுபட்டார்கள் (யோவா. 7:43). அவர் மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார் என்று சிலர் நினைத்தார்கள் (வ. 40; உபா. 18:15ஐக் காணவும்). அவரே மேசியாவாக இருக்க வேண்டும் என்று ஒரு சிலர் நினைத்தார்கள் (யோவா. 7:41அ). மற்றவர்களோ, அவர் தாவீதின் ஊராகிய பெத்லகேமில் இருந்து வராமல், கலிலேயாவில் இருந்து வந்தார் (என்று அவர்கள் நினைத்ததால்), அவர் மேசியாவாக இருக்க முடியாது என்று கூறினார்கள் (வ. 41ஆ, 42; 2 சாமு. 17:12-16; மீகா. 5:2-4ஐக் காணவும்).

கிறிஸ்துவின் உபதேசத்தினால் பாதிக்கப்பட்டவர்களில், அவரைக் கைது செய்துவரும்படி அனுப்பப்பட்டவர்களும் இருந்தார்கள் (யோவா. 7:32). அவர்கள் வெறுங்கையுடன் தங்கள் மேலதிகாரிகளிடம் திரும்பிய போது, அவர்கள் இயேசுவை ஏன் பிடித்துக் கொண்டு வரவில்லை என்று அவர்களிடம் கேட்கப்பட்டது (வ. 45). அவர்கள், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று பதில் அளித்தார்கள் (வ. 46).

பரிசேயர்கள் மூர்க்கம் அடைந்தார்கள் (வ. 47). அவர்கள் பின்வரும் காரணங்களினால் இயேசு மேசியாவாக இருக்க முடியாது என்று வலியுறுத்தினார்கள்: (1) அவர்கள் அவரில் விசுவாசம் கொள்ளவில்லை (வ. 48), (2) அறியாமையுள்ளவர்களே[39] அவரை விசுவாசித்தார்கள் (வ. 49), மற்றும் (3) கலிலேயாவிலிருந்து தீர்க்கதரிசி எவரும் வந்ததில்லை (வ. 52).[40] அவர்களில் ஒருவரான நிக்கொதேமு என்ற பெயர்கொண்டவர் (இவர் இயேசுவிடம் இராத்திரி வேளையில் வந்திருந்தவர் [யோவா. 3:1, 2]), ஒரு மனிதனை நியாயம் விசாரியாமல், அவனை ஆக்கினைக்கு உட்படுத்துவது தவறானது என்று சுட்டிக்காண்பித்தார் (யோவா. 7:50, 51; உபா. 1:16, 17;

*19:15-21ஐக் காணவும்).*[41] *நிக்கொதேமுவின் வார்த்தைகள் அவர்களை, அவருக்கு எதிராகத் திருப்பிவிடுதல் என்ற ஒரே செயல்விளைவையே கொண்டிருந்தன (யோவா. 7:52).*

*"அவருடைய வேளை இன்னும் வராதபடியினால்" (வ. 30ஆ; 8:20ஐயும் காணவும்) அவர்களால் கர்த்தரைப் பிடிக்கக் கூடாமற் போயிற்று என்பதை வேத பாடப்பகுதி தெளிவாக்குகிறது (வ. 30அ, 44). அவரது மரணத்திற்கான "வேளை" அண்மையில் - ஆறுமாதங்கள் மாத்திரம் தள்ளி - இருந்தது, ஆனால் இன்னும் அது வரவில்லை.*[42]

### பண்டிகைக்குப்பின்பு: இயேசுவின் அக்கறைமீதான வாக்குவாதம் (யோவா. 7:53-8:11)

*யோவான் 7:53-8:11 வசனப் பகுதி தனிச்சிறப்பானதாக உள்ளது. இவ்வசனப் பகுதி மிகப் பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லையென்றாலும், இது புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான மொழி பெயர்ப்புக்களில் உள்ளது. சிலவற்றில் இது வேதபாடப் பகுதியின் ஒரு பாகமாகக் கருதப்படுகிறது* (KJV; NKJV); *எஞ்சியுள்ளவற்றின் பெரும்பான்மையானவற்றில், இது வேதபாடப்பகுதியில் உள்ளடக்கப்பட்டு ஆனால், ஏதோ ஒரு வழிமுறையில் தனியாக அமைக்கப்பட்டுள்ளது* (NASB; NIV; RSV). *இந்த வசனங்கள் யோவானின் மூலக் கையெழுத்துப் பிரதியில் ஒரு பாகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த நிகழ்ச்சி உண்மையிலேயே நடைபெற்றதாகவே கல்வியாளர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.*

*பண்டிகையின் முடிவில், பெரும்பாலானவர்கள் இல்லம் திரும்பினார்கள் (யோவா. 7:53), ஆனால் இயேசு அந்தப் பகுதியில் தாமதித்து இருந்தார். அவர் ஒலிவ மலையில் இரவைச் செலவிட்டார் (8:1),*[43] *அநேகமாக அவர் தமது சீஷர்களை முன்னதாக அனுப்பி அவர்களால் போடப்பட்ட ஒரு கூடாரத்தில் தங்கியிருந்திருப்பார் (லூக். 9:52). அடுத்த நாள் காலை வேளையில் அவர் தேவாலயத்திற்குத் திரும்பி வந்து, போதித்தார் (யோவா. 8:2, 20). அவரது உரையைக் கேட்டவர்களில் எருசலேமில் தங்கியிருந்தவர்களும், அத்துடன் இன்னும் புறப்பட்டுச் செல்லாத சில பயணிகளும் இருந்திருப்பார்கள்.*

*அவர் தமது விரோதிகளால் இடைமறிக்கப்பட்டார், அவர்கள் "விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை ... அவரிடத்தில் கொண்டு வந்[தார்கள்]" (8:3, 4). அவரிடத்தில் அவர்கள், "இப்படிப் பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார்கள் (8:5). இந்த மாய்மாலக்காரர்கள் நியாயப்பிரமாணத்தைப் பற்றி அக்கறை கொண்டிருக்கவில்லை; இல்லையென்றால், அவர்கள் அந்த மீறுதலுக்கு உட்பட்டிருந்த ஆணையும் அங்கு கொண்டு வந்திருப்பார்களே. [விபசாரம் செய்த] ஆண் பெண் ஆகிய இருவருமே கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்று நியாயப் பிரமாணம் கூறியது (லேவி. 20:10; உபா. 22:22). அவர்கள் நீதியைப் பற்றியோ அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிதலைப் பற்றியோ கவலைப்பட*

வில்லை; அவர்கள் இயேசுவை அகப்படுத்துவதிலேயே ஆர்வமாய் இருந்தார்கள் (யோவா. 8:6அ).

அவர்களிடத்தில் கிறிஸ்து, "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று சொன்னார் (8:7). பின்பு அவர் குனிந்து, தேவாலயத்தின் கல்தரையை மூடியிருந்த தூசியின்மேல்[44] எழுதத் தொடங்கினார் (8:8) அவர் எழுந்து நின்றபோது, குற்றம் சாட்டியவர்கள் அங்கிருந்து போய்விட்டிருந்தார்கள் (8:9, 10).[45]

இயேசு, "ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா?" என்று கேட்டார் (8:10). அவள், "இல்லை, ஆண்டவரே" என்றாள் (8:11அ). பின்பு கிறிஸ்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறினார் (8:11ஆ). மதத் தலைவர்கள் பாவியை மதிப்புக்குறைவாக நடத்தினார்கள். நியாயப்பிரமாணம் பாவிக்கு மரணத்தை வெகுமதியாக அளித்தது. கர்த்தரோ பாவியை மதிப்புடன் நடத்தினார். அவர் அவளது பாவத்தை அலட்சியப்படுத்தவில்லை (அவளிடத்தில் அவர், "இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறினார்); ஆனால் அவர் இரக்கம் காண்பித்தார், மற்றும் அவர் அவளுக்கு இரண்டாவது வாய்ப்பைத் தந்தார். நம் யாவருக்கும் இரக்கமும் இரண்டாவது வாய்ப்பும் தேவைப்படுகிறது, அல்லவா?

## முடிவுரை

இந்தப் பாடம் வாழ்வை மாற்றும் கொள்கைகள் நிறைந்ததாக உள்ளது. அவற்றில் நான்கை நாம் மறுகண்ணோட்டமிடுவோம்:

- இயேசு தேவனல்ல என்றால், அவர் நல்லவரல்ல (யோவா. 7:12). ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டும்.
- இயேசு பரலோகத்தில் தமது பிதாவினிடத்திற்குத் திரும்பி யிருக்கின்றார்; நாம் அவரை விசுவாசிக்காவிட்டால், அவர் இருக்கும் இடத்திற்கு நாம் ஒருக்காலும் போகமுடியாது (யோவா. 7:33, 34; 8:21, 24).
- நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு அவரது சித்தத்திற்கு நம்மை ஒப்புவித்தால், அவர் தமது ஆவியை நமக்குக் கொடுத்து நமது வாழ்வை ஆசீர்வதிப்பார் (யோவா. 7:37-39; அப். 2:38ஐக் காணவும்).
- நாம் கிறிஸ்தவர்களாக இருக்கையிலும்கூட ஒரு சிக்கலில் வாழ்ந்து கொண்டிருந்தால், நாம் மனம் வருந்தி ஜெபத்தில் அவரிடம் திரும்பினால் (அப். 8:22; 1 யோவா. 1:9) அவர் நமக்கு இன்னொரு இரண்டாவது வாய்ப்பைத் தருவார் (யோவா. 8:11).

உங்கள் கடந்த காலப் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெறுவதற்காக ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் (மாற். 16:15, 16), நீங்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள விசுவாசத்தை இன்னும் வெளிப்படுத்தாமல் இருந்தால், அவ்வாறு செய்வதற்கு இதுவே [ஏற்ற] வேளையாக உள்ளது. நீங்கள்

*தேவனுக்கு உண்மையற்ற பிள்ளையாக இருந்தால் அவரிடம் திரும்பி வருவதற்கு இதுவே [ஏற்ற] வேளையாக உள்ளது. கூடாரங்களின் பண்டிகையின்போது இயேசு பிரசங்கித்ததைக் கேட்டவர்களில் பெரும் பான்மையானவர்கள் இரட்சிப்புக்கான வாய்ப்பைத் தவறவிட்டார்கள்; உங்கள் வாய்ப்பைத் தவறவிட்டு விடாதீர்கள்!*

---

*குறிப்புகள்*

*[1]இவ்விடத்தில் ''எடுத்துக்கொள்ளப்படும்'' என்ற சொற்றொடர் அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை[யும்] சுற்றியமைந்துள்ளது; அவர் இந்த பூமியில் தமது ஊழியத்தை முடிக்காத வரையில் எடுத்துக் கொள்ளப் படுதல் [பரத்துக்கேறுதல்] நடைபெற முடியாதிருந்தது. [2]இது வட்டலைகளின்மீது மிதந்து செல்லும் ஒரு சிறு மரத்துண்டைக் கொண்டு விவரிக்கப்படலாம்: அது வட்ட வட்டமாக சுற்றினாலும், அந்த வட்டலைகளின் மையப்பகுதியை நெருங்கி நெருங்கி வருவதாயிருக்கும். [3]*The Living Bible. *[4]*KJV*யில் "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால்" என்றுள்ளது. இந்த சொற்றொடர் மிகச் சிறந்த கையழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லை என்றாலும், இந்தப் பகுதியின் கவனக்குவிப்பை எடுத்துரைக்கிறது. (ஆறு வசனங்களுக்குப் பின்பு வசனம் 21ல் ஒரு ஒப்பிடத்தக்க சொற்றொடர் காணப்படுகிறது.) ஆயினும் இந்தச் சொற்றொடர் வசனம் 15ல் காணப்படாததால், இவ்வசனப் பகுதியானது தனிப்பட்ட வகையில் முக்கியத்துவமற்றது என்பதை விடப் பரவலான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஒரு சகோதரர் தமது ஆத்துமாவை அழிவுக்கு உட்படுத்தக் கூடிய பாவத்தில் சிக்கிக் கொண்டுள்ள எந்த வேளையிலும், நாம் ஒவ்வொருவரும் அவரிடம் அன்புடன் செல்ல வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளோம். [5]மலைப் பிரசங்கத்தில் இயேசு, உங்களுக்கு எதிராக ஒரு சகோதரர் எதையேனும் செய்திருப்பதாக நீங்கள் அறிந்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கினார். நீங்கள் அவரிடம் செல்ல வேண்டும் (மத். 5:23, 24). இவ்விடத்தில் அவர், நீங்கள் ஒரு சகோதரருக்கு எதிராக எதையேனும் கொண்டிருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கலந்துரையாடினார்: நீங்கள் அவரிடம் செல்ல வேண்டும். வாக்குவாதச் செயலில் உள்ள இருசாராரும் கிறிஸ்தவர்களைப் போல் செயல்பட்டால், இருசாராரும் செல்லுவார்கள் ... இடையில் எங்காவது ஒருவர் மற்றவரைச் சந்திப்பார்கள். ஆயினும், இவ்விருசாராரில் ஒருவர் தாம் செய்ய வேண்டியதைச் செய்யாதிருந்தால், அது மற்றவருக்கு ஒரு சாக்குப் போக்கைத் தராது: நீங்கள் குற்றம் இழைக்கப் பட்டிருப்பினும் அல்லது குற்றம் இழைத்திருப்பினும், நீங்கள் அந்த மற்ற நபரிடத்தில் சென்று அதைத் தீர்த்து வைக்க முயற்சி செய்ய வேண்டும். [6]கேயில் ஓலெர் அவர்கள், டெக்ஸாஸ் மாகாணத்தில் குயின்லேன் என்ற இடத்தில் உள்ள போல்ஸ் சிறுவர்கள் இல்லத்தில், பல ஆண்டுகளாக மேற்பார்வையாளராக இருந்தார். இவர், ஓக்லஹாமாவில் உள்ள கிழக்குப் பகுதி கிறிஸ்துவின் சபையில் பல ஆண்டுகளுக்கு முன்பாக இந்தக் கூற்றை உரைத்ததை நான் கேட்டிருக்கின்றேன். [7]அவர்கள் வெறுமனே கவனிப்பதற்கு மட்டும் செல்லுவதில்லை என்பதை அடுத்த வசனம் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. வசனம் 17, ''அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால்'' என்று கூறுகிறது - இது அவர்களும் சற்றுப் பேசி சிக்கலில் உள்ள இருசாராருக்கும் இடையில் செயல்பட முயற்சி செய்கின்றார்கள் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. [8]"சபை" என்ற வார்த்தையானது சுவிசேஷ*

*விவரங்களில் இரு வசனப்பகுதிகளில் மட்டுமே காணப்படுகிறது: மத்தேயு 16 மற்றும் 18. இவ்வார்த்தையின் முதல் பயன்பாடு உலகளாவிய சபையைக் குறிக்கிறது. இவ்வார்த்தையின் இரண்டாவது பயன்பாடு உள்ளூர் சபை ஒன்றைக் குறிக்கிறது. [9]ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இருந்தால், சபையின் ஆவிக்குரிய நலன் தொடர்பான எல்லா விஷயங்களிலும் அவர்கள் முன்னணியில் நின்று செயல்பட வேண்டும். [10]மத்தேயு 18:15-17 வசனப்பகுதியானது சபை ஒழுங்கு நடவடிக்கைப் பற்றிக் கேள்விகளை உண்டாக்கலாம். காலம் அனுமதித்தால், நீங்கள் இந்தப் பாடக் கருத்தின்மீதான 1 கொரி. 5 போன்ற பிற வசனப்பகுதிகளைக் கொண்டு வர விரும்பலாம் (2 கொரி. 2:4-11ஐக் காணவும்); 2 தெச. 3:6, 14, 15; 1 தீமோ. 5:20; மற்றும் ரோமர் 16:17.*

*[11]வசனம் 19ல் உள்ள வாக்குத்தத்தமானது, முன்பு மத்தேயு 16:19ன் கடைசிப் பகுதியில் பேதுருவுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தத்தைப் போன்றதாக உள்ளது. ("கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் உள்ள விளக்கவுரைகளை மறுகண்ணோட்டமிடவும்.) மத்தேயு 18:19ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் நேரடியாகப் பேசியதால், இந்த வாக்குத்தத்தமானது அடிப்படையில் அவர்களுக் குரியதாகும் என்று பெரும்பாலான விளக்கவுரையாளர்கள் கருதுகின்றார்கள். இருப்பினும், இங்கு, சபை ஒழுங்குநடவடிக்கை என்ற பாடக்கருத்து சந்தர்ப்பப் பொருளாக இருப்பதால், சபையின் நடவடிக்கைக்கான பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை இவ்விடத்தில் ஏற்படுத்த முடியும். ஒரு சபை பரலோகம் "கட்டியுள்ளபடியாக கட்டுகிறது" (அதாவது, பரலோகம் அங்கீகரித்துள்ளவற்றை மட்டுமே செய்கிறது) என்றால், அவர்களின் செயல்பாடு தேவனுக்குப் பிரியமான தாக இருக்கிறது. வசனம் 18:19ஐ, இரு கிறிஸ்தவர்கள் தாங்கள் விரும்புகின்ற எதையாகிலும் தேவனிடத்தில் கேட்க முடியும் மற்றும் தேவன் அதை அவர்களுக்குக் கொடுப்பார் என்ற தகுதியற்ற வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்ளக் கூடாது (1 யோவா. 5:14). [12]பேதுரு இந்தக் கேள்வியைக் கேட்டார் என்ற உண்மையானது, இயேசுவின் உரைக்கு முன்னதாக நடைபெற்றிருந்த சூடான வாக்குவாதத்தின்போது அவர் விமர்சனத்தின் தாக்குதலால் தாக்கப்பட்டிருந்தாரோ என்று நம்மை வியப்படையச் செய்கிறது. [13]மாபெரும் கலிலேய ஊழியத்தின் பிந்திய பகுதியை யோவான் திட்ட வட்டமாகக் குறிப்பிட்டார், ஆனால் அவரது வார்த்தைகள் அந்த ஊழியத்தின் எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்துரைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும். [14]*NASB *வேதாகமம்* "the Feast of Booths" *என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறது, இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால் நான், அதிகம் பழக்கமான* "Feast of Tabernacles" *என்பதைப் பயன்படுத்துகின்றேன். [15]இந்தப் பண்டிகை பற்றிய கூடுதலான தகவல்களுக்கு, அடுத்துவரும் ''சீஷர்கள் ஆகின்றவர்கள்'' என்ற பிரசங்கத்தில் காணவும். [16]இயேசுவும் இவர்களும் ஒரே தாயை(மரியாளை)க் கொண்டிருந்தார்கள் ஆனால் ஒரே தந்தையைக் கொண்டிருந்ததில்லை (தேவனே இயேசுவின் தந்தையா யிருந்தார்; யோசேப்பு இவர்களுக்குத் தந்தையாயிருந்தார்) என்பதால் இவர்கள் அரை சகோதரர்களாய் இருந்தார்கள். யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவை இவர்களின் பெயர்களாகும் (மத். 13:55; மாற். 6:3). [17]பிற்பாடு இவர்கள் அவரில் விசுவாசம் கொண்டார்கள் (அப். 1:14; 1 கொரி. 15:7ஐக் காணவும்); ஆனால் இந்த வேளையில், அவர்கள் விசுவாசித்திருந்ததில்லை. [18]இயேசு பொய்யுரைத்ததில்லை (யோவா. 7:18ஐக் காணவும்). அவர் சத்தியத்தின் உருவாக இருந்தார், இருக்கின்றார் (யோவா. 14:6). [19]பிறவியிலேயே பார்வையற்றவராய் இருந்த ஒரு மனிதரைக் குணமாக்கியது (யோவா. 9:1-41) ஒன்றுதான் கூடாரங்களின் பண்டிகை தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட ஒரே அற்புதமாக இருந்தது. [20]பல கிரேக்க*

*வார்த்தைகள் "வேளை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன; யோவான் 7:6ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தையானது "சரியான வேளை" என்று அர்த்தப்படக்கூடும்.* NIV*யில் காணவும்.*

[21]KJV*யும் மற்ற பல மொழிபெயர்ப்புகளும் "இன்னும்" என்ற வார்த்தையை உள்ளடக்குகின்றன.* [22]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 315. [23]KJV*யில் "எலியாஸ்[எலியா] செய்தது போல்" என்றுள்ளது. இந்த வார்த்தைகள் மிகச் சிறந்த கையெழுத்துப் பிரதிகளில் இல்லையென்றாலும், [இவைகள்] இந்தச் சிந்தனை யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் சிந்தைகளில் இருந்திருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றன. இந்த அப்போஸ்தலர்களால் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்திருக்க முடியுமா? நாம் அறிவதில்லை, ஆனால் அது கர்த்தரின் சித்தமானால் தங்களால் அதைச் செய்யமுடியும் என்று அவர்கள் நினைத்தார்கள் என்பது உறுதி.* [24]*இயேசுவின் கடிந்துகொள்ளுதல் பற்றிய* KJV*யின் சுருக்கமான விவரிப்பில் "மனுஷகுமாரன் மனிதரின் ஜீவனை அழிப்பதற்கல்ல, அவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கவும் அவர்களை இரட்சிக்கவுமே வந்தார்" என்ற வார்த்தைகளை உள்ளடக்குகின்றன.* NASB*யில் இந்த வார்த்தைகள் அடைப்புக் குறிகளுக்குள் இருக்கின்றன, இவை மிகச் சிறந்த கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுவதில்லை.* [25]*இதை மத்தேயு 8:19-22உடன் ஒப்பிடவும். லூக்கா 9:57-62 பற்றிய ஒரு விவரமான படிப்பிற்கு "சீஷர்கள் ஆகின்றவர்கள்" என்ற பிரசங்கத்தில் காணவும்.* [26]*இயேசு தம்மிடத்தில் தாமே கேட்டுக்கொள்ளாத எதையும் சீஷர்களாகவிருந்த இவர்களிடம் கேட்கவில்லை. அவர் "கலப்பையிலே கை வைத்து" பின்னிட்டுப் பாராதிருந்தார் (லூக். 9:62).* [27]*அந்த வேளையில் எருசலேமில் இருந்த ஒவ்வொருவரும் யூதராயிருந்ததால், இது விநோதமானதாக ஒலித்திருக்கலாம்; ஆனால் வசனம் 13ஐக் கவனியுங்கள், அங்கு யூதர்கள் "யூதர்களுக்கு" பயந்ததினால் பேசாதிருந்தார்கள்.* [28]*அவர் கலிலேயாவில் செய்திருந்த அற்புதங்களைப் பற்றி மக்கள் கேள்விப்பட்டு இருந்திருக்கலாம். மேலும், எருசலேமுக்கு முன்பொருமுறை அவர் வந்திருந்த போது, குளத்தின் அருகில் சப்பாணியாக இருந்த ஒரு மனிதரை அவர் குணமாக்கியது குறித்து எழுந்திருந்த வாக்குவாதத்தை அவர்கள் மறந்திருந்ததில்லை (யோவா. 7:21-23; யோவா. 5ஐக் காணவும்).* [29]*சப்பாணியாக இருந்த ஒரு மனிதரை இயேசு குணப்படுத்தியபோது (யோவா. 5:1) ஒரு பண்டிகை நாளாயிருந்தது என்பது முந்திப் பதிவு செய்யப்பட்ட காலவேளையாயிருந்தது - இது அநேகமாக ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பஸ்கா பண்டிகையாக இருக்கலாம்.* [30]*இயேசு முன்னதாகவே எருசலேமுக்கு வந்திருந்தாரா இல்லையா என்பது பற்றி வேதவசனம் ஒன்றும் கூறுவது இல்லை. அவர் தேவாலயத்தினுள் சென்ற போதுதான் அங்கு [எருசலேமுக்கு] வந்திருந்தார் என்று யூகிப்பது ஏற்புடையதாகக் காணப்படுகிறது.*

[31]*அவர் அநேகமாக சாலொமோன் மண்டபத்திற்குச் சென்றிருப்பார் (யோவா. 10:23; அப். 3:11 ஆகிய வசனங்களைக் காணவும்). சிலர், யோவான் 7:14 வசனமானது மல்கியா 3:1ன் நிறைவேற்றமாக உள்ளது என்று நினைக்கின்றார்கள்.* [32]*இயேசுவின் போதனை மக்களை எப்போதுமே பிரமிப்படையச் செய்தது (மத். 7:28, 29; 22:33; மாற். 1:22; யோவா. 7:46 ஆகிய வசனங்களைக் காணவும்).* [33]*நாசரேத்தூரில் இருந்த மக்கள் இயேசுவுக்கு மறுசெயல் செய்த வழிமுறையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும் (மத். 13:54).* [34]*யூத ஆண்குழந்தைகள் எட்டாவது நாளில் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் (லேவி. 12:3), எட்டாவது நாள் ஓய்வுநாளாயிருப்பினும் அது [விருத்தசேதனம்] செய்யப்பட வேண்டும்.* [35]*இயேசு, "நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்" (யோவா. 7:28) என்ற தமது கூற்றில் வஞ்சப் புகழ்ச்சியை/இருபொருள் சொல்லணியைப்*

*பயன்படுத்தினார். [36]வசனம் 35, "... கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர் களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?" என்று கூறுகிறது. "சிதறியிருக்கிறவர்கள்" என்பது புறஜாதியாருக்குள் சிதறியிருந்த யூதமக்களைக் குறிக்க செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்ட ஒரு கிரேக்கச் சொற்றொடராக இருந்தது. [37]மூலவேத வசனத்தில் "வயிறு"* ["belly"] *என்றுள்ளது (KJVயில் காணவும்), ஆனால் "உள்ளத்திலிருந்து" என்பது கருத்தைத் தெரிவிக்கிறது. [38]37 முதல் 39 வரையுள்ள வசனங்களின் விரிவான ஒரு படிப்பிற்கு இந்தப் புத்தகத்தில் இனிவரும் "ஜீவ தண்ணீர்" என்ற பிரசங்கத்தில் காணவும். [39]கூட்டத்தார் நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள். மேலும் அவர்கள் அந்தக் கூட்டத்தார் "சபிக்கப்பட்டவர்கள்" என்றும் கூறினார்கள். தேவனு க்குக் கீழ்ப்படியாதவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று நியாயப்பிரமாணம் கூறிற்று (உபா. 27:26ஐக் காணவும்). விசுவாசிகள் அல்ல ஆனால் தாங்களே கீழ்ப்படியாதவர்களாக இருந்தார்கள் என்பதைக் காண இயலாத அளவுக்கு அதிகாரிகள் மேட்டிமையினால் மிகவும் பார்வையற்றுப் போயிருந் தார்கள். [40]குறைந்தபட்சம் ஒரு தீர்க்கதரிசி கலிலேயாவிலிருந்து வந்திருந்தார்: யோனா (2 இரா. 14:25). பரிசேயர்கள் பழைய ஏற்பாடு மற்றும் இயேசுவின் பிறப்பிடம் ஆகிய இரண்டைப் பற்றியும் தங்களது அறியாமையை வெளிப்படுத்தினார்கள். பிற்பாடு, யோவான் 9:29ல், அவர்கள் உண்மையில் அவர் எங்கிருந்து வந்தார் என்று தங்களுக்குத் தெரியாது என்று ஒப்புக்கொண்டார்கள்.*

*[41]நிக்கொதேமு தமது விசுவாசத்தை அறிக்கை செய்யவில்லை, ஆனால் குறைந்த பட்சம் கர்த்தருக்காக அவர் வெளிப்படையாகப் பேசினார். யோவான் 3ல் அவரது பதில்செயலில் இருந்து அவர் தமது விசுவாசத்தில் வளர்நிலையை ஏற்படுத்தி யிருந்தார். [42]அதே வேளையில், அவர் தேவனுடைய அருளிரக்கத்தினால் பாதுகாக்கப் பட்டிருந்தார். இந்த வேளையில், இயேசுவின் விரோதிகள், கூட்டத்தார் அவரில் விசுவாசம் வைத்தார்கள் என்ற உண்மையினால் செயல்பட இயலாமல் தடுக்கப் பட்டார்கள். [43]ஒலிவமலை எருசலேம் நகரின் கிழக்குப் பகுதியில், கிதரோன் ஆற்றின் அக்கறைப் பகுதியில் இருந்தது. வரைபடத்தை காணவும். [44]அவர் என்ன எழுதினார் என்பதை வேத வசனப்பகுதி கூறுவதில்லை, இதைப் பற்றிய யூகம் பயனற்றதாக உள்ளது. [45]இந்த நிகழ்ச்சி பற்றிய ஒரு விவரமான படிப்பிற்கு இன்றைக்கான சத்தியத்தின் இன்னொரு புத்தகத்தில் உள்ள "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்ற பிரசங்கத்தில் காணவும்.*